# வகுப்பு - 8 - வேதியியல், 13. நீர்

71. நீர் ஆவியாதலின் உள்ளுறை வெப்ப மதிப்பு _______.

1. 80 ஜூல்/கிராம் 2. 540 ஜூல்/கிராம் 3. 336 ஜூல்/கிராம் 4. 2268 ஜூல்/கிராம்

72. நீர் ஆவியாதலின் உள்ளுறை வெப்ப மதிப்பு _______.

1. 80 கலோரி/கிராம் 2. 540 கலோரி/கிராம் 3. 336 கலோரி/கிராம் 4. 2268 கலோரி/கிராம்

73. ஒரு கிகி பொருளின் வெப்பநிலையை 1 $^{0}$C அல்லது 1 K உயர்த்த தேவைப்படும் வெப்ப ஆற்றலே அப்பொருளின் _______ எனப்படும்.

1. உள்ளுறை வெப்பம்
2. உருகுதலின் உள்ளுறை வெப்பம்
3. வெப்ப ஏற்புத் திறன்
4. தன் வெப்ப ஏற்புத் திறன்

74. ரேடியேட்டர்களில் நீர் குளிர்விப்பானாகப் பயன்படக் காரணம் _______.

1. அதிக உள்ளுறை வெப்பம்
2. அதிக உருகுதலின் உள்ளுறை வெப்பம்
3. குறைந்த வெப்ப ஏற்புத் திறன்
4. அதிக தன் வெப்ப ஏற்புத் திறன்

75. கூற்று: நீராவியால் ஏற்படும் காயம், கொதிநீரினால் ஏற்படும் காயத்தை விட அதிக பாதிப்பை ஏற்படுத்தும்.

காரணம் A: நீரின் அதிக உள்ளுறை வெப்பம்.

காரணம் B: நீரின் அதிக தன் வெப்ப ஏற்புத்திறன்

காரணம் C: நீரின் குறைந்த உள்ளுறை வெப்பம்.

காரணம் D: நீரின் குறைந்த தன் வெப்ப ஏற்புத்திறன்

1. காரணம் A, C சரி
2. காரணம் A, B சரி
3. காரணம் B, D சரி
4. காரணம் C, D சரி

76. தூய நீர் லிட்மஸ் தாளை _______ மாற்றத்திற்கு உட்படுத்தும். ஏனெனில் நீர் _______ தன்மை உடையது.

1. நீல லிட்மஸ் தாளை சிவப்பாக மாற்றும், அமிலத்
2. சிவப்பு லிட்மஸ் தாளை நீலமாக மாற்றும், காரத்.
3. சிவப்பு லிட்மஸ் தாளை இளஞ்சிவப்பாக மாற்றும், உப்புத்.
4. எவ்வித நிற மாற்றமும் நிகழாது, நடுநிலைத்.

LIVEWORKSHEETS

77. தூய நீரின் pH மதிப்பு ______.

1. 7    2. < 7    3. > 7    4. ≥ 7

78. மழை நீரின் pH மதிப்பு ______.

1. 7    2. < 7    3. > 7    4. ≥ 7

79. அமில மழை நீரின் pH மதிப்பு ______.

1. 5    2. 5 - 5.5    3. 6    4. 7

80. HCl தயாரிப்பில் நீர் ______ செயல்படுகிறது.

1. நிலைப்படுத்தியாக    2. நிலைக்காட்டியாக    3. வினையூக்கியாக    4. அனைத்தும்.

81. நீருடன் விரைவில் வினையில் ஈடுபடாத உலோகம் எது?

1. Na    2. Cu    3. Mg    4. Ca

82. பொதுவாக உலோகங்களுடன் நீர் வினைபுரிந்து ஹைட்ராக்ஸைடுகளைத் தருவதுடன் ______ வாயுவை வெளியேற்றுகிறது.

1. $H_2$    2. $O_2$    3. $N_2$    4. $CO_2$

83. பின்வருவனவற்றுள் நீருடன் அதிவிரைவில் வினைபுரியும் உலோகம் எது?

1. Na    2. Cu    3. Mg    4. Ca

84. பின்வருவனவற்றுள் Na க்கு அடுத்தபடியாக நீருடன் வினைபுரியும் உலோகம் எது?

1. Na    2. Cu    3. Mg    4. Ca

85. சோடியம் நீருடன் அதிவிரைவில் வினைபடுவதால் ______ ல் வைத்து பாதுகாக்கப்படுகிறது.

1. பெட்ரோல்    2. டீசல்    3. மண்ணெண்ணெய்    4. அனைத்தும்.

86. $C + H_2O \xrightarrow{1000\ ^0C}$

1. $CO_2 + H_2$    2. $CH_2 + O_2$    3. $CO + H_2$    4. 1 மற்றும் 3

87. $2Cl_2 + 2H_2O \xrightarrow{Sunlight}$

1. $4HCl + O_2$    2. $2HCl + O_2$    3. $3HCl + O_2$    4. $HCl + O_2$

88. நீர்வாழ் உயிரினங்கள் நீரில் கரைந்துள்ள ______ ஐ பயன்படுத்துகிறது.

1. $CO_2$    2. $O_2$    3. $O_2$ மற்றும் $CO_2$    4. $O_2$ மற்றும் CO

LIVEWORKSHEETS

89. சிப்பிகளும் நத்தைகளும் தனது கூட்டை (கால்சியம் கார்பனேட்) உருவாக்கக் காரணமான வாயு.

1. $CO_2$ 2. $O_2$ 3. $O_2$ மற்றும் $CO_2$ 4. $O_2$ மற்றும் சிறிதளவு $CO_2$

90. சிப்பிகளும் நத்தைகளும் தனது கூட்டை எவ்வாறு உருவாக்குக்கிறது?

1. கால்சியம் பை கார்பனேட்டை சிதைத்து கால்சியம் கார்பனேட்டை உருவாக்குகிறது.

2. கால்சியம் கார்பனேட்டை சிதைத்து கால்சியம் பை கார்பனேட்டை உருவாக்குகிறது.

3. கால்சியம் பை கார்பனேட்டை சிதைத்து கால்சியத்தை உருவாக்குகிறது.

4. கால்சியம் கார்பனேட்டை சிதைத்து கால்சியத்தை உருவாக்குகிறது.

91. சாக்கடல் எனும் ஏரியில், மற்ற கடல்களைக் காட்டிலும் சுமார் _______ மடங்கு அதிக உப்பு நீரில் கரைந்துள்ளதால் அடர்த்தி அதிகரித்து சாக்கடல் எனும் பெயரைச் சுமந்துள்ளது.

1. 5 2. 10 3. 15 4. 20

92. நீரில் கரைந்துள்ள சில உப்புகள் சுவை தருவதுடன், உயிரினங்களின் வளர்சிதை மாற்றத்திற்கும் இன்றியமையாதது. அவை எவை?

1. NaCl 2. Ca, Mg, K 3. Cu, Zn 4. அனைத்தும்.

93. நீர் தூய்மையாக்கலில் உள்ள படி எது?

1. வீழ்படிவாக்கல் 2. வடிகட்டுதல் 3. நுண்ணுயிர் நீக்கம் 4. அனைத்தும்.

94. Ca, Mg போன்ற உப்புகள் நீரில் அதிகளவு கரைந்துள்ள நீர் _______.

1. கடின நீர் 2. மென்னீர் 3. சுடுநீர் 4. அனைத்தும்.

95. சோப்புடன் மிகக் குறைந்த அளவே நுரையைத் தருகிறது எனில் அது _______.

1. கடின நீர் 2. மென்னீர் 3. சுடுநீர் 4. மழைநீர்

96. நாம் நீரை சேமித்து வைத்துள்ள பாத்திரத்தில் கடின படிவுகளைக் காண்கிறோம் எனில் அது _______

1. கடின நீர் 2. மென்னீர் 3. சுடுநீர் 4. மழைநீர்

97. நீரின் தற்காலிக கடினத் தன்மைக்கு காரணமான உப்புகள் _______.

1. கால்சியம், மெக்னீசியம் உப்புகள் 2. குளோரைடு, சல்ஃபேட் உப்புகள்

3. கால்சியம், சல்ஃபேட் உப்புகள் 4. அனைத்தும்.

98. நீரின் தற்காலிக கடினத் தன்மையை நீக்க ஏற்ற முறை எது?

1. குளிரவைத்து வடிகட்டல் 2. இளஞ்சூட்டில் வைத்து வடிகட்டல்

LIVEWORKSHEETS

3. கொதிக்க வைத்து வடிகட்டல் 4. அனைத்தும்.

99. நீரின் தற்காலிக கடினத் தன்மையை நீக்க கொதிக்க வைக்கும் பொழுது எம்மாற்றம் நிகழ்கிறது?

1. கால்சியம் ஹைட்ரஜன் கார்பனேட் சிதைந்து கரையாத கால்சியம் கார்பனேட்டாக மாறுகிறது.
2. கால்சியம் கார்பனேட் சிதைந்து கரையாத கால்சியம் ஹைட்ரஜன் கார்பனேட்டாக மாறுகிறது.
3. கால்சியம் கார்பனேட் சிதைந்து கரையாத கார்பனேட்டாக மாறுகிறது.
4. அனைத்தும்.

100. நீரின் நிரந்தர கடினத் தன்மைக்கு காரணமான உப்புகள் _______.

1. கால்சியம், மெக்னீசியத்தின் குளோரைடு, சல்ஃபேட் உப்புகள்
2. கால்சியம், மெக்னீசியத்தின் பை கார்பனேட் உப்புகள்
3. இரும்பின் உப்புக்கள்
4. அனைத்தும்.

101. நீரின் நிரந்தர கடினத் தன்மையை நீக்கப் பயன்படுவது _______.

1. சமையல் சோடா 2. பிளிச்சிங் பவுடர்
3. சலவை சோடா 4. அனைத்தும்.

102. சூரிய ஒளி, ஆக்ஸிஜனைப் பயன்படுத்தி நுண்ணுயிர்களை நீக்கி நீரைத் தூய்மையாக்கும் முறைக்கு _______ என்று பெயர்

1. நுண்ணுயிர் நீக்கம் 2. காற்றேற்றம்
3. நீரேற்றம் 4. அனைத்தும்.

103. நீரில் பிளீச்சிங் பவுடர் சேர்ப்பதன் நோக்கம் _______

1. தெளிய வைப்பதற்கு. 2. சுவையைக் கூட்டுவதற்கு.
3. கிருமிகளை நீக்குவதற்கு 4. அனைத்தும்.

104. கடின நீரை மென்னீராக மாற்றும் முறை _______.

1. கொதிக்க வைத்து வடிகட்டல் 2. வேதிப்பொருள்களைச் சேர்த்தல்
3. அயனி பரிமாற்றம் 4. அனைத்தும்

105. ஓர் நாளில் தனிநபர் சராசரியாக பயன்படுத்தும் நீரின் அளவு _______.

1. 35 லிட்டர் 2. 150 லிட்டர் 3. 3.5 லிட்டர் 4. 13.5 லிட்டர்

LIVEWORKSHEETS